# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

## செய்தி தகவல்

**செய்தி தகவல் எண்.** 1/2016 **நாள்** 29.07.2016

1995ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை இட ஒதுக்கீடு) விதிகளில் சில திருத்தங்களை அரசாணை எண். 87, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா-1) துறை, நாள் 25.07.2016-யினை தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழ் எண். 174, நாள் 25.07.2016ல் வெளியிடப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு :-

**"வார்டுகளில் உள்ள பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்" என்ற சொற்றொடருக்கு பதிலாக "வார்டுகளில் உள்ள பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் மற்றும் மகளிர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும் என அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.**

இதே போன்று 1995ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்கள்) விதிகளில் சில திருத்தங்களை தமிழக அரசாணை எண். 88, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா-1) துறை, நாள் 25.07.2016ஐ மேற்படி அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**அதன்படி, ஊரக உள்ளாட்சி தேர்தல்களுக்கான வேட்பு மனுக்களை முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 05.00 மணி வரை தாக்கல் செய்யலாம். வேட்பு மனு பரிசீலனைக்கான நாளில் முற்பகல் 10.00 மணி முதல் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.**

இத்தகவலை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் தெரிவிக்கின்றது.

(கையொப்பம்) 29/7/16

மக்கள் தொடர்பு அலுவலர்